DOC-2 (1)/62

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8097180

1. District : Pudukkottai PS: V&AC Year: 2019 FIR No. 6/19 Date: 8.3.19
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Crpc and Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 102 Crpc r/w 7, 7(A) of prevention of corruption (Amendment) Act 2018
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 7.3.2019 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 15.50 Time to : 22.30 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Computer Typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o Regional Manager, Tamilnadu Forest plantation corporation Limited, Pudukkottai North 3km
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S District
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. Balu (b) Father's/ ~~Husband~~'s Name : N. Periyannan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : District Inspection cell Inspector, Trichy (g) Address :
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. N. Alagarrajan S/o Perumal, Junior Assistant O/o Regional Manager Tamilnadu forest plantation corporation Ltd Pudukkottai
2. N. Anandan S/o Kailasam veladipatti, Gandarvakottai Tk, Pudukkottai
3. N. Raju S/o Subbaiah, Mekudipatti, Pudukkottai Taluk. 4. N. Rajendiran S/o Gurusamy Indira nagar 3rd street, Machuvadi, Pudukkottai. 5. N. Murugesan S/o Adaikkalam, Kummangpatti Mullur PO, Pudukkottai

8. Reasons for delay in reporting by the complainant / Informant :
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்பட்டது:

07–03–2019ம் தேதி புதுக்கோட்டை மாவட்ட ஆய்வு குழு அலுவலரும், புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு பார்டியினரும் சேர்ந்து மதியம் 03.50 மணி முதல் இரவு 22.30 மணி வரை புதுக்கோட்டை மண்டல மேலாளர், தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம் லிமிடெட், புதுக்கோட்டை அலுவலகத்தை திடீர் சோதனை மேற்கொண்டதை தொடர்ந்து ஆய்வு குழு அலுவலர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:– அனுப்புநர் திரு.பெ.பாலு, வயது 57/2019, த/பெ. பெரியண்ணன், மாவட்ட ஆய்வுக்குழு, திருச்சிராப்பள்ளி, பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, புதுக்கோட்டை, அய்யா, புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகர் மச்சுவாடி, தஞ்சாவூர் செல்லும் தார் சாலையிலிருந்து கிழக்கு பக்கமாக செல்லும் சாலையின் உள்ளே தெற்கு வடக்காக தரைத்தளம் மட்டும் உள்ள மண்டல மேலாளர், தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம் லிமிடெட், புதுக்கோட்டை அலுவலகத்தை திரு.பெ.பாலு, மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், திருச்சிராப்பள்ளி

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் Y. Charles Nephinsy
Rank: நிலை Inspector of Police V&AC, Pudukkottai

மற்றும் திரு.சோ.நா.சரவணன், துணை வட்டாட்சியர்/தலைமை உதவியாளர், "B" பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை மற்றும் காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு புதுக்கோட்டை மற்றும் காவல் குழுவினர்களுடன் இணைந்து திடீர் சோதனை மேற்கொண்டோம்.

திடீர் சோதனையின் போது மண்டல மேலாளர், தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம், புதுக்கோட்டை அலுவலகத்தில் தரைத்தளத்தில் உள்ள வடக்கு பக்கம் வாயில் கொண்ட மண்டல மேலளார் அறையில் 1) திரு.சோலை, த/பெ சுப்பாய, வனசரகர். புதுக்கோட்டை 2) திரு.வீரப்பன், த/பெ லெட்சுமணன், வனசரகர், கந்தர்வக்கோட்டை, 3) திரு.அழகர்ராஜன், இளநிலை உதவியாளர், 4) திரு.முனுசாமி, த/பெ பச்சியப்பன், வனக்காப்பாளர், புதுக்கோட்டை மேலும் ஒப்பந்தக்காரர்கள் 5) திரு.பழனிவேலு, த/பெ ராமையா, வேப்பங்குடி, திருவரங்குளம் அஞ்சல், ஆலங்குடி தாலுகா, புதுக்கோட்டை, 6) திரு.ராமையன், த/பெ நாகன், உரியம்பட்டி, கந்தர்வக்கோட்டை, 7) திரு.ரவிச்சந்திரன், த/பெ ராமையா, குப்பையன்பட்டி, ஆதனக்கோட்டை அஞ்சல், 8) திரு.அரங்கலிங்கம், த/பெ சன்னாசி செட்டியார், சின்னையாசத்திரம், 9) திரு.குமார், த/பெ சிங்கமுத்து, முத்தகோன்பட்டி, முள்ளூர் அஞ்சல், 10) திரு.நடராஜன், த/பெ சுப்பையா, எண்.19, அக்கச்சிவயல் முதல் வீதி, புதுக்கோட்டை, 11) திரு.சிவசாமி, த/பெ முத்துக்கருப்பன், மச்சுவாடி, 12) திரு.முத்துக்குமார், த/பெ கோவிந்தன், மரத்துகிடை, ஆதனக்கோட்டை அஞ்சல் மற்றும் 13) திரு.முருகேசன், த/பெ அடைக்கலம், கும்மப்பட்டி, முள்ளூர் அஞ்சல், புதுக்கோட்டை ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

மேலும் அலுவலக முகப்பு வராண்டாவில் 14) திரு.ஆனந்தன், த/பெ கைலாசம், வேலாடிப்பட்டி, கந்தர்வக்கோட்டை, 15) திரு.சேகர், த/பெ ஆறுமுகம், வேலாடிப்பட்டி, கந்தர்வக்கோட்டை, 16) திரு.பழனி, த/பெ மாரியப்பன், மேலகாயாம்பட்டி, வடவாளம், 17) திரு.வீரையா, த/பெ சுப்பையா, வாரப்பூர், 18) திரு.ராஜீ, த/பெ சுப்பையா, மேக்குடிப்பட்டி, புத்தாம்பூர் அஞ்சல், 19) திரு.ராமசாமி, த/பெ முத்துக்கருப்பன், மச்சுவாடி, 20) திரு.செல்லக்கண்ணு, த/பெ பாலகிருஷ்ணன், வாகவாசல், 21) திரு.மாசிலாமணி, த/பெ பழனியாண்டி, வனக்காவலர், மண்டல மேலாளர் அலுவலகம், புதுக்கோட்டை, 22) திரு.ராஜேந்திரன், த/பெ குருசாமி, கண்காணிப்பாளர் (ஓய்வு), எண்.3017, இந்திரா நகர் 3ம் வீதி, மச்சுவாடி, 23) திரு.ஞானசேகரன், த/பெ குமாராசாமி, ஆதனக்கோட்டை, 24) திரு.ராஜேஷ்கண்ணன், த/பெ ராமையன், உரியம்பட்டி, வேலாடிப்பட்டி அஞ்சல், கந்தர்வக்கோட்டை, 25) திரு.காமராஜ், த/பெ பாண்டியன், வனக்காப்பாளர், புதுக்கோட்டை ஆகியோர் பெஞ்சில் அமர்ந்திருந்தனர்.

மேலும் அலுவலகத்தின் மேற்கு பக்கம் உள்ள தெற்கு பார்த்த அலுவலக அறையில் 26) திருமதி.புவனேஸ்வரி, த/பெ வீரையா, இளநிலை உதவியாளர் புதுக்கோட்டை, 27) திருமதி.ராஜலெட்சுமி, த/பெ ரவிச்சந்திரன், இளநிலை உதவியாளர், புதுக்கோட்டை, 28) திருமதி.லீலா, க/பெ ராஜய்யா, சீனிவாச நகர், மச்சுவாடி, புதுக்கோட்டை மற்றும் அந்த அறையின் எதிரே உள்ள கணினி அறையில் 29) திருமதி.சரண்யா, த/பெ நடராஜன், (தற்காலிக பணியாளர்), மச்சுவாடி ஆகியோர் அமர்திருந்தனர்.

மேலும் மண்டல மேலாளர் அறையில் ஆஜரில் இருந்த 1) திரு.சோலை, வனசரகர், புதுக்கோட்டை 2) திரு.வீரப்பன், வனசரகர், கந்தர்வக்கோட்டை ஆகியோரிடம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளர் தன்னையும் மேற்படி அரசு சாட்சிகளையும் அறிமுகம் செய்து கொண்டு திடீர் ஆய்வு மேற்கொள்ள வந்த விபரத்தை கூறி திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. திடீர் ஆய்வின் போது மேற்படி வனசரகர்கள் இன்று (07.03.2019) முந்திரி மகசூல் ஏலம் சம்மந்தமாக போடப்பட்டிருந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் திறந்து பார்வையிட்டு கொண்டிருந்தார். அவரிடம் மண்டல மேலாளர் பற்றி கேட்க, மண்டல மேலாளர் திருச்சியில் உள்ள மேலாண்மை இயக்குநர் அலுவலகத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு சென்றிருப்பதாக கூறினார். அதுபோல் அலுவலக கண்காணிப்பாளர் திரு.சரவணபிரபுவும் உடன் சென்றுள்ளதாக தெரிவித்தார்.

அதன் பிறகு மண்டல மேலாளர் அறையில் அமர்ந்திருந்த திரு.பழனிவேல் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.3000/- இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க 14.02.2019ஆம் தேதி ஆரஸ்பதி மரம் ஏலம் கேட்டது தொடர்பாக ஏலத்தொகையில் 80 சதவீதம் அதாவது ரூ.3,50000/- ஏற்கனவே 26.02.2019ஆம் தேதி செலுத்தியுள்ளதாகவும், அது சம்மந்தமாக உத்தரவு வந்துள்ளதா என்று விசாரித்து கொண்டிருந்த போது தாங்கள் அலுவலகம் வந்து திடீர் ஆய்வு மேற்கொண்டதால் மேற்படி தொகை நான் வீட்டிலிருந்து எனது செலவிற்கு எடுத்து வந்த பணம் என்று கூறியதால், அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.3000/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

திரு.ராமையன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.42,260/-ம் இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க அவர் ஏற்கனவே 28.02.2019ஆம் தேதி நடைபெற்ற முந்திரி மகசூல் ஏலத்தில் கலந்து கொண்டதாகவும், அது சம்மந்தமாக இன்று நேரடி ஏலம் கேட்பதற்காக தானும், தனது மகன் திரு.ராஜேஷ்கண்ணனுடன் வந்ததாகவும், ராஜேஷ்கண்ணன் வெளியில் வராண்டாவில் உட்கார்ந்து இருப்பதாகவும், ஒரு வேளை ஏலம் இறுதி செய்தால் 80 சதவீதம் பணம் கட்ட வேண்டும் என்பதால் தான்

ரூ.42,000/—ம், தனது மகன் 2,50,000/—ம் வைத்திருந்தாகவும். மேலும் தங்களது செலவிற்காக ரூ.550/— தனது வீட்டிலிருந்து எடுத்து வந்ததாகவும் கூறினார். இது சம்மந்தமாக அலுவலக ஆவணங்களை பார்வையிட்டதில் 28.02.2019ஆம் தேதி திரு.ராமையா பெயரில் ஒப்பந்தப்புள்ளி போடப்பட்டிருந்தது தெரியவந்ததால் மேற்படி தொகை வைத்திருந்ததற்கு முகாந்திரம் இருந்ததால், அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.250000+42000+550/— அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

திரு.ரவிச்சந்திரன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.5,150/— இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க இன்று முந்திரி மகசூல் ஏலத்திற்கு 3 இடத்தில் உள்ள காட்டிற்கு மூன்று ஒப்பந்தப்புள்ளி போட்டிருந்தாகவும், அதில் கலந்து கொள்ள வந்ததாகவும், செலவிற்காக வீட்டிலிருந்து ரூ.5,150/— எடுத்து வந்ததாக தெரிவித்தார். இது சம்மந்தமாக அலுவலக ஆவணங்களை பார்வையிட்டதில் 07.03.2019ஆம் தேதி திரு.ரவிச்சந்திரன் பெயரில் 3 ஒப்பந்தப்புள்ளி போடப்பட்டிருந்தது தெரியவந்ததால் மேற்படி தொகை வைத்திருந்ததற்கு முகாந்திரம் இருந்ததால், அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.5,150/— அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

திரு.அரங்கலிங்கம் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.2,02,900/— இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க இன்று முந்திரி மகசூல் ஏலத்திற்கு 1 இடத்தில் உள்ள காட்டிற்கு 28.02.2019ஆம் தேதி மற்றும் இன்று 07.03.2019ஆம் தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி போட்டிருப்பதாகவும், அதில் கலந்து கொள்ள வந்ததாகவும், ஒருவேளை ஏலம் உறுதியானால் 80 சதவீத தொகை கட்டுவதற்காக ரூ.2,02,900/— எடுத்து வந்ததாக தெரிவித்தார். இது சம்மந்தமாக அலுவலக ஆவணங்களை பார்வையிட்டதில் 28.02.2019 மற்றும் இன்று 07.03.2019ஆம் தேதி திரு.அரங்கலிங்கம் பெயரில் ஒப்பந்தப்புள்ளி போடப்பட்டிருந்தது தெரியவந்ததால் மேற்படி தொகை வைத்திருந்ததற்கு முகாந்திரம் இருந்ததால், அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.2,02,900/— அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

திரு.குமார் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.830/— இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க இன்று முந்திரி மகசூல் ஏலத்திற்கு 1 இடத்தில் உள்ள காட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி போட்டிருந்தாகவும், அதில் கலந்து கொள்ள வந்ததாகவும், செலவிற்காக வீட்டிலிருந்து ரூ.830/— எடுத்து வந்ததாக தெரிவித்தார். இது சம்மந்தமாக அலுவலக ஆவணங்களை பார்வையிட்டதில் 07.03.2019ஆம் தேதி திரு.குமார் பெயரில் ஒப்பந்தப்புள்ளி போடப்பட்டிருந்தது தெரியவந்ததால் மேற்படி தொகை வைத்திருந்ததற்கு முகாந்திரம் இருந்ததால், அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.830/— அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.நடராஜன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.160/— இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க ரூ.160/—

தனது கை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.160/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

திரு.சிவசாமி என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.53,230/- இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க இன்று முந்திரி மகசூல் ஏலத்திற்கு 1 இடத்தில் உள்ள காட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி போட்டிருந்தாகவும், அதில் கலந்து கொள்ள வந்ததாகவும், ஒரு வேளை ஏலம் உறுதியானால் 80 சதவீத தொகை கட்டுவதற்கும், எனது செலவிற்கும் வீட்டிலிருந்து ரூ.53,230/- எடுத்து வந்ததாக தெரிவித்தார். இது சம்மந்தமாக அலுவலக ஆவணங்களை பார்வையிட்டதில் 07.03.2019ஆம் தேதி திரு.சிவசாமி பெயரில் ஒப்பந்தப்புள்ளி போடப்பட்டிருந்தது தெரியவந்ததால் மேற்படி தொகை வைத்திருந்ததற்கு முகாந்திரம் இருந்ததால், அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.53,230/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.முத்துக்குமார் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.7,130/- இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க நான் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் என்றும், இங்கு நடைபெறும் ஏலத்தை பார்க்க வந்ததாகவும், வீட்டிற்கு செல்லும் போது வீட்டிற்கு பொருட்கள் வாங்குவதற்காக ரூ.7,130/-ஐ எடுத்து வந்ததாக தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.7,130/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.முருகேசன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.80,140/- இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க ரூ.140/- தனது கை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.140/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவர் வைத்திருந்த ரூ.80,000/-க்கு அவரிடம் விளக்கம் கேட்க அவர் முன்னுக்குப்பின் முரணாக விளக்கம் கூறினார். மேலும் ஒப்பந்தகாரர் பதிவு ஆவணத்தை பார்வையிட்ட போது பதிவு செய்யாத நபர் என்று தெரிய வந்தது. மேற்படி பணம் ரூ.80,000/- வைத்திருந்ததிற்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த பணம் அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் ரூ.80,000/- கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அறையில் அமர்ந்திருந்த திரு. வீரப்பன், வனசரகர், கந்தர்வக்கோட்டை என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.600/- இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க ரூ.600/- தனது கை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.600/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

மேலும் அந்த அறையில் நின்று கொண்டிருந்த திரு.சோலை, வனசரகர், புதுக்கோட்டை மற்றும் திரு.முனுசாமி, வனக்காப்பாளர் ஆகியோரை சோதனை செய்ய அவர்களிடம் எந்த பணமும் இல்லை. மேலும் அந்த அறையில் நின்று கொண்டிருந்த திரு.அழகர்ராஜா, இளநிலை உதவியாளர் என்பவரை சோதனை செய்ய அவரிடம்

ரூ.230/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க ரூ.230/– தனது கை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.230/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அலுவலக முகப்பு வராண்டா பெஞ்சில் அமர்ந்திருந்த திரு.ஆனந்தன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.44,095/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க ரூ.95/– தனது கை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.95/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவர் வைத்திருந்த ரூ.44,000/–க்கு அவரிடம் விளக்கம் கேட்க அவர் முன்னுக்குப்பின் முரணாக விளக்கம் கூறினார். மேலும் ஒப்பந்தகாரர் பதிவு ஆவணத்தை பார்வையிட்ட போது பதிவு செய்யாத நபர் என்று தெரிய வந்தது. மேற்படி பணம் ரூ.44,000/– வைத்திருந்ததிற்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த பணம் அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் ரூ.44,000/– கைப்பற்றப்பட்டது. திரு.சேகர் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.2,50,050/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க இன்று முந்திரி மகசூல் ஏலத்திற்கு 1 இடத்தில் உள்ள காட்டிற்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி போட்டிருந்தாகவும், அதில் கலந்து கொள்ள வந்ததாகவும், ஒரு வேளை ஏலம் உறுதியானால் 80 சதவீத தொகை கட்டுவதற்கும், எனது செலவிற்கும் வீட்டிலிருந்து ரூ.2,50,050/– எடுத்து வந்ததாக தெரிவித்தார். இது சம்மந்தமாக அலுவலக ஆவணங்களை பார்வையிட்டதில் 07.03.2019ஆம் தேதி திரு.சேகர் பெயரில் ஒப்பந்தப்புள்ளி போடப்பட்டிருந்தது தெரியவந்ததால் மேற்படி தொகை வைத்திருந்ததற்கு முகாந்திரம் இருந்ததால், அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.2,50,050/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

திரு.பழனி என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.140/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க ரூ.140/– தனது கை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.140/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.வீரையா என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.780/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க ரூ.780/– தனது கை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.780/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.ராஜூ என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.8,710/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க நான் இதே அலுவலகத்தில் டிராக்டர் டிரைவராக பணிபுரிந்து கடந்த 2006ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றேன். அதன்பிறகு எனது பெயரை ஒப்பந்தகாரராக பதிவு செய்து ஒப்பந்தம் எடுத்து வருவதாக தெரிவித்தார். அவர் கையில் வைத்திருந்த பணம் ரூ.8,710/– பற்றி விளக்கம் கேட்க ரூ.710/– தனது கை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அவரது

விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.710/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவர் வைத்திருந்த ரூ.8,000/-க்கு அவரிடம் விளக்கம் கேட்க அவர் முன்னுக்குப்பின் முரணாக விளக்கம் கூறினார். மேற்படி பணம் ரூ.8,000/- வைத்திருந்ததிற்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த பணம் அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் ரூ.8,000/- கைப்பற்றப்பட்டது. திரு.ராமசாமி, த/பெ முத்துக்கருப்பன், (தினக்கூலி அலுவலர்) என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.4,930/- இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க திருவப்பூர் மாரியம்மன் கோவில் தேர் திருவிழாவை முன்னிட்டு உற்றார் உறவினர்கள் வீட்டிற்கு வருவதால் அவர்களுக்கு மதிய சாப்பாடு சரவணபவன் ஓட்டலில் 35 சாப்பாடு ஆர்டர் கொடுத்தாகவும், அதற்கு ரூ.1000/- அட்வான்ஸ் கொடுத்ததாகவும், மீதி தொகை ரூ.1800/- கொடுப்பதற்காகவும், மேலும் வீட்டிற்கு முன்பு பந்தல் அமைப்பதற்கான செலவிற்காகவும் வைத்திருந்தாக கூறி ஓட்டல் பில்லை சமர்பித்தார். அதனால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.4,930/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

திரு.செல்லக்கண்ணு என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.100/- இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க ரூ.100/- தனது கை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.100/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.மாசிலாமணி, வனக்காப்பாளர் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.100/- இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க ரூ.100/- தனது கை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.100/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.ராஜேந்திரன், த/பெ குருசாமி, (கண்காணிப்பாளர் ஓய்வு) என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.14,070/- இருந்தது. அவரை விசாரிக்க தான் இதே தஅலுவலகத்தில் 2006ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரை பணிபுரிந்தாகவும், பிறகு பணி மாறுதலில் மேலாண்மை இயக்குநர் அலுவலகத்திற்கு சென்று பணிபுரிந்து விட்டு 2011ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றதாகவும் கூறினார். மேலும் தான் வைத்திருந்த ரூ.14,070/-க்கு அவரிடம் விளக்கம் கேட்க அவர் தனது செலவிற்காக ரூ.70/- வைத்திருந்ததாக தெரிவித்தால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.70/- திருப்பி அவரிடமே கொடுக்கப்பட்டது. மீதி பணம் ரூ.14,000/- முன்னுக்குப்பின் முரணாக விளக்கம் கூறினார். மேற்படி பணம் ரூ.14,000/- வைத்திருந்ததிற்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த பணம் அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் ரூ.14,000/- கைப்பற்றப்பட்டது.

திரு.ஞானசேகரன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.2,100/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க தனது மாமா ரவிச்சந்திரன் இன்று டெண்டர் போட்டது சம்மந்தமாக உடன் வந்ததாகவும், ரூ.2,100/– தனது மனைவியின் மருத்துவ செலவிற்காக மருந்து வாங்க வைத்திருப்பதாக தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.2,100/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.காமராஜ், வனக்காப்பாளர் என்பவரை சோதனை செய்ய அவரிடம் எந்த பணமும் இல்லை.

மேலும் அலுவலகத்தின் மேற்கு பக்கம் உள்ள தெற்கு பார்த்து அலுவலக அறையில் இருந்த திரு.அழகர்ராஜன் என்பவர் இருக்கையின் முன்பிருந்த மேஜையின் வலது பக்க டிராயரை சோதனை செய்ய அதில் ரூ.9,255/–ம், ஒரு மஞ்சள் பையில் ரூ.140/– இருந்தது. அவரை அழைத்து பணம் ரூ.9,395/–க்கு அவரிடம் விளக்கம் கேட்க அவர் முன்னுக்குப்பின் முரணாக விளக்கம் கூறினார். மேற்படி பணம் ரூ.9,395/– வைத்திருந்ததிற்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த பணம் ஒப்பந்தகாரர்களிடம் கையூட்டாக பெற்று வைத்திருந்த பணம் ரூ.9.395/– கைப்பற்றப்பட்டது.

திருமதி.புவனேஸ்வரி, இளநிலை உதவியாளர் என்பவரின் கைப்பையை சோதனை செய்ய அதில் ரூ.80/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க ரூ.80/– தனது கை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.80/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திருமதி.ராஜலெட்சுமி, இளநிலை உதவியாளர் என்பவரின் கைப்பையை சோதனை செய்ய அதில் ரூ.150/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க ரூ.150/– தனது கை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.150/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திருமதி.லீலா, தொழில் நுட்ப உதவியாளர் என்பவரின் கைப்பையை சோதனை செய்ய அதில் ரூ.330/– இருந்தது. அவரிடம் விளக்கம் கேட்க ரூ.330/– தனது கை செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்கப்பட்டு அந்த பணம் ரூ.330/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் திருமதி.சரண்யா (தினக்கூலி பணியாளர்) என்பவரிடம் எந்த பணமும் இல்லை.

இந்த திடீர் ஆய்வு நடந்து கொண்டிருக்கும் போது மேலாண்மை இயக்குநர் கூட்டம் முடித்து மண்டல மேலாளர் திரு.ந.கணேசன் மற்றும் கண்காணிப்பாளர் திரு.சரவணபிரபுவும் அலுவலகம் வந்தனர். அவர்களிடம் திடீர் ஆய்வு மேற்கொள்ள வந்த விபரம் கூறி உடன் இருக்க அறிவுறுத்தப்பட்டது.

பிறகு அலுவலகத்திலிருந்து 1) வருகைப்பதிவேடு, 2) முந்திரி மகசூல் சம்மந்தமான எல விளம்பா நோட்டீஸ் (நாள்.26.11.2018), 3) அலுவலக ரசீது புத்தகம் வரிசை எண்.14801 முதல் 14900 வரை உள்ளதில் 14840 எண் வரை ரசீது எழுதப்பட்டுள்ளது மற்றும் 4) இன்றைய தினம் போடப்பட்ட 10 ஒப்பந்தப்புள்ளி பட்டியலின் நகல் எடுத்து கொண்டு அதன் அசலை இளநிலை உதவியாளர் அழகர்ராஜனிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதுபோல் 5) 28.02.2019ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி போடப்பட்டவரின் விபா அறிக்கையின் நகல் எடுத்து கொண்டு அதன் அசல் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்கண்ட 5 ஆவணங்கள் மற்றும் பணம் ரூ.1,55,395/- கைப்பற்றப்பட்டது. இச்சோதனையில் முடிவில் முந்திரி மகசூல் குத்தகை எடுக்கும் ஒப்பந்ததாரர்கள் மேற்கண்ட மண்டல மேலாளர், தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம் லிமிடெட், புதுக்கோட்டை அலுவலகத்தில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு குறைந்த விலைப்புள்ளியில் ஒப்பந்தம் ஒதுக்கீடு செய்ய வேண்டி கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் ரூ.1,55,395/-ம் கைப்பற்றப்பட்டது. எனவே மேற்படி பணம் கைப்பற்பட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் இளநிலை உதவியாளர் திரு.அழகுராஜன் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் (திரு.பாலு, திரு.பெ.பாலு, மாவட்ட ஆய்வுக்குழு, திருச்சிராப்பள்ளி).

மேற்படி புகாரை பெற்று மேற்படி புகாரின் பேரில் 1) திரு.அழகர்ராஜன், இளநிலை உதவியாளர், மண்டல மேளாலர் அலுவலகம், தமிழ்நாடு வனத்தோட்டக்கழகம் லிமிடெட், புதுக்கோட்டை மற்றும் தனிநபர்கள் 2) திரு.ஆனந்தன், 3) திரு.ராஜூ, 4) திரு.ராஜேந்திரன், 5) திரு.முருகேசன் ஆகியோர் மீது இன்று 08.03.2019ஆம் தேதி காலை 11.00 மணிக்கு புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.06/2019 பிரிவு 102 கு.வி.மு.ச r/w 7, 7(A) of Prevention of Corruption (Amendment) Act-2018ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் மனுவையும் மற்றும் திடீர் ஆய்வு அறிக்கையையும் புதுக்கோட்டை தலைமை குற்றவியல் நீதிமன்றத்திற்கும், நகல்களை சம்மந்தப்பட்ட அலுவலகர்களுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பிற்கும் வைக்கப்பட்டது.